உதயதாரகை.—MORNING STAR.

Published on the 1st and 3d Thursday of every Month, at one shilling a Quarter, payable in advance.

சஞ்சிகை. ய௬.] ௲அ௱௪௧ (௵). ஐப்பசி ௴. எ தேயதி. வியாழக்கிழமை. Thursday, October 7, 1841. [No. 19.

வரலாறு.

உதயதாரகைப் பத்திரத்தில் கற்கை, சாத்திரம், பொதுவான கல்வி, பயிர்ச்செய்கை, அரசாட்சி, மார்க்கம் முதலானவைவையைப் பற்றியும், பிரதான புதினச் சங்கதிகளைப் பற்றியும் அச்சடிக்கப்படும்.

அது தமிழ்ப் பாஷையிலும், இடைக்கிடையே தமிழும் இங்கிலீசுங் கூடினதாயும், எட்டுப் புறமுள்ளதாக நான்காய் மடித்த தாள் அளவில் ஒவ்வொரு மாதத்து முதலாம் மூன்றாம் வியாழக்கிழமைகளிற் பிரசித்தம் பண்ணப்படும்.

இதின் விலை, பத்திரம் ஒன்றுக்கு, உ பென்சு அல்லது ய௬. வெள்ளைச் சல்லி, அல்லது மூன்று மாதத்திற்கும் முன்னறக் கொடுத்திருந்தால் அப்பத்திரங்களின் விலை ஒரு சிலிங்கு.

இதிற் பத்துப் பத்திரிகைக்குக் கையெழுத்து வைத்து மாதாந்தம் பணம் முன்னேறக் கொடுத்து வைத்து, மறு பெயருக்குச் செலவிடக்கூடிய காரியகாரருக்கு இதின் விலை பத்திரம் ஒன்றுக்கு, க.இ பென்சு, அல்லது க. பணம். அல்லது மூன்றுமாதத்திற்கு முன்னறக்கொடுத்திருந்தால் விலை, க பென்சு.

இருபதுக்குக் கையெழுத்து வைத்து வருஷாந்தம் முன்னேறக் கொடுத்துவைக்குங் காரியக்காரருக்கு இதன் விலை பத்திரம் ஒன்றுக்கு க. பென்சு, அல்லது அ. வெள்ளைச் சல்லி. மூன்றுமாதத்திற்கு முன்னறக் கொடுத்திருந்தால், விலை ஆறு பென்சு.

☞ தவாற்செலவை விட.

காகிதம் எழுதிக்கொள்பவர்கள் தாங்கள் அறிவிக்க வேண்டியவைகளை உதய தாரகைப் பத்திரத்தினது முகாமைக்காரருக்கு எழுதித் தவாற்செலவுகொடுத்தனுப்பவும்.

TERMS.

The MORNING STAR will be devoted to Education, Science, and general Literature, and to the dissemination of arts, esp. in Agriculture, Government, and Religion, with a brief summary of important News.

The PRICE of the Paper is *two pence* a number, or *one shilling* a quarter, payable in advance.

To Agents who subscribe for *ten copies* and pay *in advance*, the price is *one and a half pence* a number, or *nine pence* a quarter.

To those who subscribe for *twenty copies* and pay *in advance*, the price is *one penny* a number, or *six pence* a quarter.

N. B. Postage extra.

Persons who wish to act as AGENTS, may apply to the Publisher, at the American Mission Press, Manepy, Jaffna.

CORRESPONDENTS may send their Communications *post paid* addressed to "The Editors of the Morning Star," Batticotta, Jaffna.

The following persons are authorized to act as *Agents* for the "Morning Star."

JAFFNAPATAM—Mr. C. F. Grenier; CHUNDICOLY—M. J. Povirrayasingem; WANNARPONY—S. Tampiahpilly; MOOLLITEVO—A. Mc Farland; BATTICALOE—S. A. Allegeco Modlier; MANNAR—M. S. Povirrayasingem Modlier; CALPENTYN—J. Woodhull; TRINCOMALIE—Rev. C. Hole; COLOMBO—Philip Canjimanadan; KANDY—Rev. W. Oakley; MADURA—Rev. F. D. Ward; DINDIGUL—Rev. J. J. Lawrence; TANJORE—Rev. T. Brotherton; MADRAS—P. R. Hunt, Esq. புங்குடுதீவு.—பத்தா நாகநாதபிள்ளை

[BRIEF HISTORICAL VIEW OF INDIA.]

[Continued from page 172.]

இந்துதேசச் சரித்திரம்.—*Ancient history of India*

Concluded.

மகா அலெக்குசந்தர் இறந்தபின் சீரியர் காலத்துக்குக் காலம் அலெக்குசந்தருக்குக் கீழ்ப்பட்டிருந்த இந்துதேசத்தின் வடபகுதிகளை ஆண்டுவந்தார்கள். மகா அந்தியோக்கென்பவருக்குப் பிறகு பகத்தரியாதேசத்தை ஆண்ட மூன்றாம் இராசாவாகிய ஆயுதிமஸ (Euthedemus.) என்பவனின் குமாரனாகிய தெமித்திரியஸ (Demetrius) என்னுஞ் சீரியன் இந்துதேசத்தின் வடபகுதிகளை ஆண்டுவந்தான். அப்பகுதிகளுக்குச் சிங்கல நகரம் (Sangala or Sagala or Euthydemia in honour of Euthydemus) அக்காலத்திற் றலைப்பட்டணமாயிருந்தது. தெமித்திரியஸ இராசன் மகா அந்தியோக்கென்பவரின் புத்திரியை மணஞ்செய்து பகத்தரியா நாட்டுக்கிராசாவாகித் தன் சிறிய பிதாவாகிய மீனாந்தருடனும் (Menander) வேறனேக பிரபுக்களுடனுங் கூடிக்கொண்டு ஐபேசிஸ நதியைக் (Hyphasis) கடந்து யமுனை நதிமட்டும்போய் தட்டாபட்டணத்தையும் (Tatta or Pattalene in the delta of the Indus) கீழ்ப்படுத்திக் கரைப்பக்கங்களெங்கும் போய்க் கச்சி நாடு (Tessarioustus or Cutch) சீகிஸத நாடு முதலிய தேசங்களை வெற்றிகொண்டு மறு திசைகளை நோக்கிச்சென்றார்கள். மீனாந்தர் இராசன் கிறிஸ்து பிறக்க (௱௬௰) வருடத்துக்கு முன் பகத்தரியா நாட்டுக்கிராசாவாகிச் செல்விக்கையாயரசாண்டு சீரிய தேசத்திராசாவுக்கு விரோதமாகப் படையெடுத்துப் போக எண்ணியிருக்கையிற் சடுதியாயிறந்துவிட அவனுக்குப் பிறகு இயூக்கிறேற்றிஸ (Eucratides I.) என்பவன் பகத்தரியாநாட்டுக்கிராசாவாகி தெமித்திரியஸ இராசனுக்குக் கீழ்ப்பட்டிருந்த இந்து தேசத்தின் பலபிரிவுகளையுந் தனக்குக் கீழாக்கிச் சிந்து நதிக்கப்பால் (௬௫) பட்டணங்களை ஆண்டுவந்தான். பகத்தரியா அரசாட்சியுண்டாகி (௱உய) வருடமிருந்தபின் மங்கிப்போகப் பார்தியா நாட்டையாண்ட மித்திரதேதன் (Mithridates I.) கிரேக்கருக்குக் கீழ்ப்பட்டிருந்த இந்துதேசத்தின் பகுதிகளையெல்லாமாண்டுவந்தான். இவன் சிந்து நதி முதற் கங்கைநதியீறாகவுள்ள இராச்சியங்களை எல்லாஞ் சயித்து மகா அலெக்குசந்தர் உட்செல்லாத தேசங்களெங்கும் போய் அனேகஞ் சாதிகளை வலோற்காரமாய்த் தனக்குக் கீழ்ப்படுத்தியாண்டுவந்தான், இவன் காலத்தில் வழங்கப்பட்ட பார்தியருடைய காசுகள் மதுராபுரி (Mathura) அக்கிரு (Agra) உச்சினி (Oojein) ஆசுமீரம் (Ajmere or Rajpootiana) முதலிய பட்டினங்களில இக்காலத்திற் கண்டெடுக்கப்பட்டதாக ஒருவரெழுதுகிறார். ஒரு பிரயாணி (Colonel Todd) தான் இந்துதேசத்திற் பயணம்பண்ணுகையில் அதிகவிலையுயறப்பெற்ற பொற் தகடுகளையுந் தங்கத் தகடுகளையுங் கண்டெடுத்ததாகவும் அவைகளில் பகத்தரியனாகிய அப்பல்லோதோத்தென்பவனின் (Apollodotas) முகமுள்ள ஒரு தகட்டை யமுனை ஆற்றங்கரையிற் கிஸ்டணனின் (Krishnu) பேரனாகிய சூரசேனன் (Sura-sena) இருந்தாண்டுவந்த சூரபுரத்தின் (Surapura) அழிவுக்குள்ளும, மீனாந்தருடைய முகமுள்ள வெறொன்றை மதுராபுரியிலுங் கண்டதாகவும், அத்தகடுகளிற் பாரிசு இராசனாகிய சேப்பருடைய சாசேனித் தகடுகளில் (Sessanian medals) அச்சடிபட்டிருந்த செந்து (Zend or Pehlevi character) அட்சரங்களுள்ள எழுத்துக்கள் அச்சடிபட்டிருந்ததாகவுமெழுதியிருக்கிறார். மேற்சொல்லிய இரண்டு இராசாக்களும்போவெனிற் பகத்திரியர் ஆகையால் முற்காலத்திலே பகத்திரியரும் பார்தியரும் இந்து தேசத்தை ஆண்டார்களென்பது நிச்சயம்.

அதநிற் வாசுதேவனென்றொரு இந்தியன் (Bas-Deo) கன்னோசத்தைச் (Kanouge) சிறப்பித்து வங்காளம், பாகார் என்னும் நாடுகளையுங் கீழ்ப்படுத்தி இராசபட்டத்தைப் பெற்றுக் கிறிஸ்து பிறந்த (௬௱௩௰)ம் வருஷத்திற் சிங்காசனத்தில ஏறி அதிக கீர்த்தியாய் அரசாண்டான். அக்காலத்திற் பாரிசுதேசத்தையாண்ட வயிராங்கோ இராசன் (Byram Gore) வியாபாரியைப்போலிந்து தேசத்திற்கு வந்து பாரிசு தேசத்தின் தத்துவம், அரசாட்சி, நன்னெறி, ஒழுக்கம், முதலியவற்றின் வளர்ச்சியைப் பற்றி புகழ்ச்சியாய்ப் பேசிக்கொடுதிரிந்தான். ஆகிலும் வாசுதேவ நாராயன அவனை ஆரென்றறியவில்லை. ஒரு நாள் அவ்வியாபாரி கன்னோசத்துக்கயலாய்ச் செல்லுகையில், ஒரு காட்டு யானை கெர்சித்துக்கொண்டவனுக்கு முன் வந்தெதிர்ப்பட அவன் தன் கையிலிருந்த அஸ்திரத்தைத் தொடுத்து யானையின் மத்தகத்தைநூடுருவ எய்துவிழுத்திப்போட்டான். உடனே இச்செய்தி இராசாவுக்குப் போனபொழுது, இராசா அவனைத் தன்னிடத்தில வரும்படி பண்ணினான். அத்தருணத்தில் முன்னே பாரிசு இராசனுக்குத் திறைப்பணங் கொண்டுபோய்க்கொடுத்து வந்த ஒரு இந்தியப் பிரதானி அவ்வர்த்தகனைப் பாரிசு இராசனென்று அறிந்து வாசுதேவனுக்குச் சொல்ல, இராயன் உண்மையை அறிந்து சிங்காசனத்தைவிட்டிறங்கி இராசனைத் தழுவிக்கொ

Digitized by Google

ண்டு தன் அரண்மனையில் அவரையிருக்கச் செய்து அவருக்கு மிகுந்த உபசாரங்கள் பண்ணித் தன் புத்திரியையும் அவருக்குக் கலியாணம்பண்ணி அனேக வெகுமதிகளுடனே ஆடம்பரமாய் இராசனையும் பெண்சாதியையும் பாரிசு தேசத்திற்கு அனுப்புவித்தான். வாசுதேவனும் அவன் பின்னடியாரும் (அய)வருடம் இந்து தேசத்திற் துரைத்தனம்பண்ணின பின் அற்றுபோனார்கள். மறுபடி வாசுதேவனின் குலத்திலொருவன் சிங்காசனத்தில் ஏறுகையில், ஊருக்குள்ளே வாக்குவாதங்களுஞ், சண்டைகளு நடந்ததினாலே பிரதானிகள் சங்கங்கூடி இராச வங்கிஷத்திலுள்ள யாவரையும் இராசாங்கத்தைவிட்டகற்றி, இராணுவத்திற்குச் சேனாபதியாயிருந்த இராமதேவனுக்கு (Ram-Deo) இராச பட்டமுஞ் செங்கோலுங் கொடுத்தார்கள். மராட்டியனாகிய இராமதேவன் தயிரியமுள்ளவனும் புத்தி, அருள், தருமக்குணம், நன்னடை முதலிய இலட்சணங்களுள்ளவனுமாயிருந்தரசாண்டு, கலகம்பண்ணித் தன்னிட்டம் பற்றி நடந்த பற்பல பிரதானிகளையுங் கீழ்ப்படுத்தி, கச்சுவா வங்கிஷத்தார் (Cutswa) முன் வலோற்காரமாய்ப் பிடித்தாண்டுவந்த மறவ நாட்டையுஞ்(Marwar) சயித்துத் தன் குலத்தவர்களை அதில் ஸ்தாபித்தான். இக்காலமட்டும் அவ்விடத்தில் அவன் பின்னடியார் இருக்கிறார்கள். இராமதேவன் மகத்துவப் பிரபாய் இருந்து வெகு யுத்தங்கள் பண்ணி ஏறக்குறைய இந்து தேசம் முழுவதையுந் தன் அரசாட்சிக்குட்படுத்தி (ருச) வருடம் ஏகசக்கராதிபதியாயாண்டிறந்தான். அவன் செய்த வீரச் செய்கைகளினாலே அவன் பேர் இந்நாள் மட்டும் மங்காமற் கீர்த்திபெற்றிருக்கின்றது. மேலும் இராமதேவன் இராச்சியபாரம் பண்ணுகையில் பாரிசு தேசத்தை ஆண்ட கீகோபாத்து(Kei-Kobad) இராசனின் பிதாவாகிய பிரோசாசா (Feros-sassa) இராசனுக்குத் திறைகொடுத்து வந்தான். இராமதேவ இராயனிறந்த பின் அவன் குமாரருக்கும் மற்றுமிராச வங்கிஷத்தாருக்குஞ் சிங்காசனத்தின் பேரில் வழக்குகளும் விரோதங்களும் நடந்தன. அத்தருணத்தில் இராமதேவ இராயனுடைய தளகர்த்தன் பார்த்திபசந்தன்(Pertab-Chund) கிறிஸ்து பிறந்த (ஞா) ம் வருஷத்திற் சிங்காசனத்திலேறி இராசாவாகி இராச வங்கிஷத்தை வேரோடே அற்றுப்போகப்பண்ணி யாதொரு குழப்பமில்லாமல் இராசரிக்கம்பண்ணிவந்தான். ஆனாலும் பார்த்திபசந்தன் கொடுமையுள்ளவனுஞ் சதியோசனைக்காரனுங் கொடுங்கோலரசனுமாயிருந்து வலுவந்தமாய் இராசாக்களைச் சிங்காசனத்திலிருந்தகற்றித் தனக்கு மனமானவர்களையெல்லாம் வெட்டிக் கொன்று, பேதைமனதுள்ளவர்களாய்க் கீழ்ப்பட்டுவிட்டோமென்றவர்களை மாத்திரந் தப்பவிட்டு இவ்விதமாக வெகு நாசங்கள் செய்தான், தற்பெருமைகொண்டு பாரிசு இராசனுக்குத் திறைகொடாமல் விட்டுவிட்டதினாலே நூசிருவான் (Noshirwan) என்னும் பாரிசு இராசன் தன்னுடைய தானாதிபதிகளைத் திறைவாங்கிவரும்படி அனுப்புவிக்க அவர்கள் அவனுடைய அரண்மனைக்கு வந்தவிடத்தில் அவர்களைக் கனவீனப்படுத்தித் திறைப்பணங் கொடாமல் வெறுமையாயனுப்பிவிட்டான். பாரிசு இராசனிச்சங்கதிகளை அறிந்தவுடனே தன் ராணுவ சேனைகளை யுத்தத்துக்கனுப்ப இருபக்கத்தாருக்கும் போர்நடந்தபொழுது பார்த்திபசந்தனுஞ் சேனைகளும் முறியடிக்கப்பட்டுத் திரும்பிவந்து பாரிசு இராசாவோடே சமாதான பொருத்தனைபண்ணி முன்கொடாதிருந்த நிலுவைப்பணமுங் கொடுத்து இனியெப்பொழுதும் உங்களுக்குக் கீழாயிருப்போமென்று சத்திய உடம்படிக்கைபண்ணிக்கொடுத்துச் சமாதானமாயாண்டார்கள்.

பார்த்திப சந்தனிறந்தபின் அவன் வமிசத்தாருங் கொஞ்சக்காலம் இராச்சியமாண்டபின் அற்றுப்போனார்கள். பார்த்திப சந்தனுக்குக் கீழ்ப்பட்டிருந்த இராசாக்களெல்லாருந் தன்னிட்டம் பற்றி நடந்தார்கள். இராசாக்களென்னும் நாமம் மங்கிப்போக இராணரென்ற Ranas)பட்டமுடையவர்களாய்க் கொம்பலமீயர் (Chumpulmere) சித்தூர்(Chittoor)மந்திசுரம் (Mundesoor)என்னும் மலைநாடுகளைப் பிடித்தாண்டுவருங்காலத்தில் மறுபடி இந்துதேசத்தை ஆண்டுவந்த மோகுல்வமிச இராயர்கள் (Mogul Emperors)அவர்களைத் துரத்திவிட்டு இராச்சியங்களைப் பிடித்துக்கொண்டார்கள். பார்த்திபசந்தன் இறந்த பின் வைசியனாகிய அனந்ததேவனென்றொருவன்(Annindeo) விஸ்தாரமான மாழவ நாட்டையும் (Malwa) மறுபடி சுறுக்காகக் கூர்ச்சரத்தையும்(Gujerat,) மராட்டியர் சீமைகளையும், பீரார் நாடு முழுவதையும்(Berar)பிடித்துத் தனக்குக் கீழ்ப்படுத்தி செங்கோல் செலுத்தி (லகூ) வருஷம் துரைத்தனம்பண்ணிவந்தான். இவன் காலத்திற் பாரிசு தேசத்தில் கேசேரோபருவீசனென்னும்(Chusero Purvese)இராசன் இராச்சியம்பண்ணினான். அனந்ததேவன் வெகு தேசங்களை வெற்றிகொண்டு போகையில, இழிகுலத்தானாகிய மலையதேவனென்றொருவன் (Maldeo) பராக்கிரமசாலியாய் வெகு சேனைகளையுங்கொண்டு தெல்வி நாட்டையும் நகரத்தையும் பிடித்து அவ்விடத்திலிருந்த இராச வங்கிஷத்தாரை எல்லாம் நாசம்பண்ணி சனநெருக்கமுள்ளதாயிருந்த சிறப்பான கன்னோசு நகரியையுந் தனக்குக் கீழாக்கினான். அச்சமையத்தில் கன்னோசு நகரியின் கோட்டைகளுக்குள்ளே (கலது) பாக்குக் கடைகளும், சருக்காருக்கு வருஷத்தோறும் பத்திலொன்று கடமைகொடுத்துப் பிழைத்துவந்த (கலது) நட்டுவர், பாடுவோர், தாசிகளுமிருந்தார்கள். மலையதேவன் (சய) வருடமாண்ட பின் இறந்துபோக எங்குமுள்ள பிரபுக்கள் தன்னிட்டமானார்கள், சுறுக்காக ஒரு இராச்சியமாய் அரசாட்சி ஒழுங்காயிருந்த இந்து தேசங் கெட்டுப்போய் துலுக்க அரசாட்சிக்காரர் வந்து [illegible] திதாய் அரசாட்சி ஒழுங்குகள் செய்து ஆளத்துவக்கின காலம்வரையில் மங்கியிருந்தது.

Notice. யஎஞ். சஞ்சிகையில் அலெக்குசந்தர் எகிப்த்துக்குப்போய் மாணித்துவிட்டாரெனச் சொல்லியிருந்தும், பாரிசுதேச மார்க்கமாய்ப் பாபிலோன் நகரியிலுள்ள சாசரென்ற (Shahr-zour) இடத்திற் போயிறந்து விட்டாரென அனேக சரித்திரகாரர் சொல்வது ஒத்துவருவதால் அதுவேசரி.

(இன்னும் வரும்.)

தேன் சமுத்திரத் தீவுகளில் நடந்த சங்கதி.

[From Williams' Missionary Enterprizes in the South Seas].

(Continued from page 163.)

(தகத்தியன்)தீவிற் போல அந்துதாங் தீவிலும் விக்கிரகாராதனை தேவ செயலினாலே குறைந்தது. எப்படியெனில் முன் சொன்னது போலப் பிரதானியின் மகன் செத்தவுடனே பல கிராமங்களிலுமுள்ள சனங்கள் தங்கள் விக்கிரகங்களைக்கொண்டுவந்து பிரசங்கிகளுடைய காலடியிலே எறிந்துவிட்டு,யெகோவாவையே வணங்க விரும்புகிறோமென்றார்கள். அந்தக் கிழமை முழுதிலும் சனங்கள் அதிகமதிகமாய்க் கூடினதின்மேல் தொகையைப் பார்த்தவிடத்திலே தீவில் விக்கிரகாராதனைக்காரர் இல்லாதிருந்தார்கள். இவ்விடத்திற் கிறிஸ்துமார்க்கப் பிரசங்கிகள் போய்ப் பதினைந்து மாதஞ் சரியாய்ச் சென்ற அடுத்த மார்கழிமாதத்தின் ஓய்வுநாளில் இவர்கள் யாவரும் ஒருமிக்கக் கூடிக் கூட்டம் வைக்க இடமில்லாததினாலே ஒரு சோலையின் நிழலிலே கூடிமெய்த்தேவனைத் துதித்தார்கள். பிரதானமான நாளாயெண்ணப்பட்ட இந்நாளின்தேவாராதனைமுடிந்தபோது, (பப்பியன்) மற்றநாட் காலமே வைக்கப்படப்போகிற ஒரு பொதுவான கூட்டத்துக்கெல்லாரையும் வரும்படி கேட்டுக்கொண்டு அவர்களை அனுப்பிவிட்டான்.

மற்றநாள் நியமித்த மணி நேரத்திலே தீவார் எல்லாரும் வந்து கூடினார்கள். அப்பொழுதிந்தப் பிரசங்கி தீவார் விக்கிரகாராதனையை நடத்துவதிற் செலுத்திவந்த பிரயாசத்தையும், பண நட்டத்தையுங் காண்பித்ததின்மேல் இனிமெய்த்தேவனுடைய தொண்டிலே முயற்சியாயிருக்கவேண்டுமென்றதையுங் காண்பித்து இரண்டு காரியங்களைச் சொன்னான். அவையாவன. (க) தீவிலுள்ள விக்கிரகங்கள் யாவும் எரிக்கப்படவேண்டுமென்றும், மிச்சமானவைகளிற் சிலதைத் தன்னிடத்திற் கொண்டுவரும்படிக்கும், தான் அவைகளை (இராயதத்திரி) யாவிலிருக்கிற எங்களுக்கனுப்பிப் பராபரனுடைய வசனத்தினால் உண்டான வெற்றிப்பாட்டின் மகத்துவத்துக்காக எங்களுடனே சந்தோஷப்படவும், (உ) தாங்கள் தேவாராதனையை நடப்பிப்பதற்காக உடனே ஒரு கோவிலைக் கட்டத் துவங்க வேண்டுமென்றுஞ் சொன்னான். உடனே சனமெல்லாம் இதற்குச் சம்மதித்ததுமல்லாமற் கூட்டமுடிந்தவுடனே,விக்கிரகங்களைக் கொளுத்திச் சுடுவதற்கும் அவைகளைத் தகர்த்துப்போடுவதற்குமான கிரியைத்துடனே போய் அப்படிச் செய்ததினாலே, மற்றநாட் காலமே தீவினெந்தவிடத்திலாகுதல் தகர்க்கப்படாமல் வணக்கத்துக்காக வைக்கப்பட்ட விக்கிரகமொன்றும் மீதியாயிருந்ததில்லை.

அந்தந்தக் கிராமத்துச் சனங்கள் அவரவருக்குரிய தலைமைக்காரரும் பூசாரிமாரும் முன்நடக்கத் தாங்களிகழ்ந்து தள்ளின விக்கிரகங்களையும் எடுத்துக்கொண்டு பின்னாகச் சென்று பிரசங்கிகளுடைய பாதத்தடியிலே கொண்டுவந்து வைத்தார்கள். அவர்கள் ஒவ்வொருவனுஞ் சில மூல பாடங்கள் எழுதியிருக்கிற புத்தகத்தையுஞ் சுவிசேஷத்தையும் வாங்கிக்கொண்டு போனார்கள். இப்படி இவ்விரண்டு பிரசங்கிகளுடைய பிரயாசத்தினாலும் தீவிலுள்ள சனங்களுக்குப் பொருந்திய விக்கிரகாராதனையும் அதின் பொருட்டால் வரப்பட்ட கிற்பந்தமும் நீங்கினதுமல்லாமற் பர இராச்சியத்துக்குப்

Digitized by Google

த புதுமாறுதலுமுண்டாயிற்று. உடனே அவர்கள் தேவாலயத்தைக் கட்டத் தொடங்கினார்கள். கட்டுவேலைக்குச் சுண்ணம் வேண்டியதாயிருந்துஞ், சுண்ணஞ் சுடுகிறவிதம் இவர்களுக்குத் தெரிந்திராதபடியாற் பிரசங்கிமார் இவர்களுக்குக் காட்டிக்கொடுத்தார்கள். ஆதலாற் சூளைக்கு விறகு வெட்டுகிறதற்குங், கடற்கரையிற் கல்லுக் கிளப்புகிறதற்குமாக வெகு சனங்கள் போனார்கள். கல்லும் விறகுஞ் சம்பாதிக்கப்பட்டவுடனே பிரசங்கிகள் தீவாருடனே சூளைவைக்கச் சொன்னார்கள். சூளையில் நெருப்புப்பற்றி எரிகிறதையுங் கல்லு வேகிறதையும் முன்னொருபொழுதும் அறிந்திராத இத்தீவார் கண்டவுடனே அன்னியராகிய இப்பிரசங்கிகள் கல்லுகளைப் பொரித்துக்காண்பிக்கிறார்கள். இனிப் புசல் மூதவிய கேடுபாடுகள் வந்தெங்கள் தீவின் பழவருக்கங்களைத் தருகிற மரந்தடிகளை முரித்துப்போட்டாலுங் கல்லுகளைப் பொரியல்பண்ணுகிறவிதத்தை அறிந்திருக்கிறபடியாற் பஞ்சமேதென்று சந்தோஷமாய்க் கூக்குரலிட்டார்கள். பிரசங்கிகள் அப்படியல்லக் கல்லுகள் பொரிக்கிறதாகத் தோன்றினாலும் அவைகளென்னவாகுமென்பதை இனிமேற் காண்பீர்களென்றார்கள். மற்றநாட்காலமே சனங்கள் சூளைவைக்கப்பட்ட விதத்தை வந்துபார்த்தவுடனே கல்லுகளெல்லாம வெந்தபின் மாவாகக்கிடந்ததைக் கண்டு ஆச்சரியப்பட்டார்கள். மேலும் பிரசங்கிகள் கோவிலில் ஒரு பக்கத்திற் சுவருக்குச் சாந்து பூசிக் காயவிட்டதின்மேல் தீவார் அதைக்கேள்விப்பட்டு, பிரதானிகள் பூசாரிகள், ஆண், பெண், குழந்தைகள் யாவரும் இக்காட்சியைக் காணவந்தார்கள். வந்தவர்களிற் சிலர் சுவரை மணந்துபார்த்தார்கள். வேறு சிலர் சுறண்டிப்பார்த்தார்கள். வேறு சிலர் கல்லை அடித்து அதிலுண்டான மாவைப் பார்த்தார்கள். அப்படியே சந்தோஷத்தினால நிறையப்பட்டு, இதுமகா ஆச்சரியம்! இது மகா ஆச்சரியம்! மெய்யான தேவனை வழிபடுகிறவர்களுக்குப் பூமியின் மண்ணையுங் கல்லையும் அவர் சுதந்தரமாய் முடியப்பண்ணுகிறாரென்று கூக்குரலிட்டார்கள்.

சிலநாளாக (மங்காகி) தீவுக்குநேராய்ச் சுக்கான் திருப்பி அதிற் சேர்ந்தவுடனே அத்தீவிற் கரையிலிருந்த சிலர் (பாசிபிக்குச் சமுத்திரத்திலுள்ள எத்தீவிலும் வழக்கமாயிருக்கிறதுபோல) நாங்கள் தங்களிடத்தில் வரும்படி கொடி தூக்கினார்கள், நாங்களும் அவர்கள் எங்களிடத்தில் வருவதற்குக் கொடி தூக்கிப்பின் கப்பலில் இருந்த வள்ளத்தைக் கடலில் விட்டுப் (பப்பியனையும்) அவனோடே வேறிரண்டு பிரசங்கிகளையுங் கூட இறக்கிவிட்டுக் கரையில் இறங்காமல் வள்ளத்தில் இருந்துகொண்டு, நாங்கள் ஆரென்றும் எங்கள் நோக்கம் இன்னதென்றும், அந்தத் தீவின் பிரதானி வள்ளத்தில் ஏறி எங்களைக் காணவரும்படி செய்யவேண்டுமென்றும் கெட்டியாய்க் கற்பித்தோம். ஆகிலும் இவனுடைய பேச்சில் அவர்கள் எடுபடாதபடியினாலே திரும்பிவந்தார்கள். சற்றுநேரத்தின்மேற் தீவாருடைய இரண்டு வள்ளங்கள் எங்களுக்கு நேராய்த் தண்டுவலித்துவருகையில் எங்கள் வள்ளமும் அவைகளைச் சந்திக்கப் போயிற்று. போகையில் வள்ளங்களில் வந்தவர்கள் தூரத்திலே கண்டு மிகுதியாய்ப் பயந்து திரும்பித் தண்டுவலித்துக் கரையிற்குதித்துத் தங்களைக் காத்துக்கொள்வதற்கு ஈட்டிகளையும் மற்றும் ஆயுதங்களையுந் தரித்துக்கொண்டு நின்றார்கள். இவர்கள் நிலைமை இப்படியிருந்ததினாலே எங்கள் வள்ளம அவர்களைச் சேராமல மறுபடியுந் திரும்பிவிட்டது. அத்தீவார் இனியொரு முறை எங்களிடத்தில்வரத்துணிந்திருக்கிறார்களென்பதை நாங்கள் கேள்விப்பட்டுச் சில முத்துச் சிப்பிகளையும கத்திகளையும் உபகாரமாகக் கொடுத்தனுப்பி எங்களிடத்தில் வரக் கேட்டோம். இரண்டுபேர் சம்மதித்து வந்துங் கப்பலில ஏறப் பயந்திருந்தார்கள். அப்பொழுது எங்கள் கப்பலிலிருந்த (அத்துதாகிபிலீ) பிரதானியையும் (இராயதோங்கு) விற்சனங்களிற் சிலரையும் அவர்களுக்குக் காட்டினவிடத்திலும் அவர்கள் எங்களை நம்பாமற் கப்பலில் ஏறமாட்டோமென்றுவிட்டார்கள். மேலும் (இராயதோங்கு) விற்சனங்கள் இவர்களுடன்மிகுதியாய்ப் பேசினதினாலே ஒருவன கப்பலில ஏறினான். இந்தக்கப்பலில் ஏறினவனுடனே கூடவந்தவன் தான் வந்தவள்ளத்திற்றானே ஏறித் தன் சிவனைக்காப்பாற்ற ஓடிப்போகிறவனைப்போலப் பறந்தோடிப் போனான். கப்பலில ஏறினவனும் பயத்தினாலே அறிவுகெட்டுப்போனான். அவன் தெளிந்தவுடனே கப்பலில பேரை விசாரித்ததுமன்றி முன்னொருமுறை மாத்திரம் தன் ஊரவர்கள் இவ்வித கப்பலைக் கண்டார்களெனச்சொன்னான். கப்பல கரைக்குக் கிட்டியிருந்ததனாலே பிரசங்கிமாரையும் இறக்கிக்கொண்டு கரையிற்போய் வருகிறது நல்லதென்று இவனுடனே சொன்னபோது, அவன் சம்மதித்துவள்ளத்தில் இருந்த நீரை அள்ளி ஊற்றுகிறவன்போல இறங்கி அவர்கள் பராக்காய் இருந்த தருணத்தில தன் உயிரை மீளாமல் இருக்கலாமோவென்று தனக்குள்ளே சொல்லிக்கொண்டு, சுறுக்குப்பண்ணித் தண்டுவலித்துத் திரும்பியும் பாராமற் கதியாய்க் கரையிற் சேர்ந்தான். காரியமிப்படி நடந்துவருகிறதினாலே எங்கள் நம்பிக்கை கெட்டுப்போயிற்று.

(இன்னும் வரும்.)

மார்க்க விசாரணை.

[Inquiry on Religion.]

ஒருமரத்தை அதின் கனியினால் அறியலாம்.

இதற்கு முந்தின சஞ்சிகையிலே மார்க்கவிசாரணையென்றொரு பிறிவெழுதித் தமிழ்மார்க்கம் பராபரனாலே வந்ததோ அல்லவோவென்று இதிற்காட்டுவோமெனச் சொன்னோம். ஒரு மரத்தை அதின்கனியினால் அறியலாமென்ற வசனத்தைக் கத்தராகிய இயேசுக்கிறிஸ்து திருவுளம்பற்றினார். இந்த விசேஷத்தைத் தமிழ்மார்க்கத்துக்கு ஒட்டிப்பார்ப்போமாக. ஒவ்வொருபொருளுந் தன் தன் பலனுக்கு இசைந்ததாய் உலகத்தில் நடைபெற்று வருகின்றது. அதுபோல மார்க்கமாவது பாவிகளாயிருக்கப்பட்ட மனுஷர் பரிசுத்தமடைந்து கத்தாவுக்குரிய சகலவிதமான நற்குணங்களைப் பெற்று மோட்சத்தை அடைகிறதற்கு வழியேயாம். ஆனாலுந் தமிழ்மார்க்கம் பாவிகளை வரவரப் பாவிகளாக்கிப் பரிசுத்தத்துக்குப் பதிலாக அசுத்தத்தை உண்டுபண்ணி நித்தியநரகத்துக்குக் கொண்டுபோகிற வழியாயிருக்கின்றது. எப்படியெனில், தமிழ்மார்க்கத்திற் சொல்லப்பட்டிருக்கிற பிரமா, விட்டுணு, உருத்திரன், கந்தசுவாமி முதலான தேவர்கள் அடங்காத காமவிகார இச்சையுள்ளவர்களாயும் பொய், களவு முதலான அசுத்தங்களுள்ளவர்களாயும், தமிழ்மார்க்கத்திலுள்ள கந்தப்புராணம் முதலான புராணகாவியங்கள் எல்லாம் ஆண் பெண்ணொருமித்துக் கேட்கக்கூடாத சிற்றின்பம் நிறைந்ததாகவும், தேர் கோவிற் பிரகாரம்முதலான இடங்களில் நிருவாணமும் மனங்கூசாமற் பார்க்கக் கூடாத அவலட்சணமுமான உருநாட்டுகள் சித்திரிப்பதினாலும், தமிழ்க்கோவிலாராதனைக்கு அக்கிரமம் நிறைந்த தேவடியாள் ஒரு பகுதியாயிருந்து வேசைகள் தேவனுக்குப் பாரிகளென்றிருப்பதினாலும் மனுஷர் திருவிழாக்களுக்குப்போய் மேற்சொன்ன சித்திரங்களைக் கண்குளிரக் கண்டு சிற்றின்பப்பாட்டுகளைக் காது நிறையக் கேட்டு விகாரவீரியமுண்டாய்த் தாசிகளுடனே சேர்ந்து வரவர அசுத்தவான்களாகிறார்கள். இதுவன்றித் தமிழ்க்கோவிலுள் ஆதிமூலத்தில் மந்திரித்தாவாகனம்பண்ணியிருக்கிற இலிங்கம் ஆவிடையாரின் பொருளைத் தெரித்துப் பார்த்தால் ''சேரப்பாகசுமால நாற்ற நாற்ற''மென்றுசொல்லவேண்டும். இப்படியேயுள்ளமற்றுங் காரியங்களைப்பார்த்தால் தமிழ்மார்க்கம் மனுஷரைப் பரிசுத்தராக்கிப் பரசாயலைத் தரிப்பிக்கத்தக்க மார்க்கமல்ல, இதன் கனியினாலே இந்த உண்மையை அறியலாம். இதுமார்க்கத்துக்குள்ள நன்மைப்பகுதிகளுள்ளதல்ல, அமார்க்கத்துக்குள்ள தீமைப்பகுதிகளுள்ளது. ஆகையால் தமிழ்மார்க்கம் பராபரனாலே வந்ததல்ல.

Digitized by Google

இலக்கண நுட்பவிசாரணைகாரனின் எதிர்மொழிக்கு மறுமொழி.
[A Rejoinder.]

கனம்பொருந்திய முகாமைக்காரரே,

இடைபினத்தைப்பற்றிய என்விடையை நன்குணரமாட்டாதில லக்கண நுட்ப விசாரணைகாரன்றெரிந்த குற்றங்களைக் கடிந்து அதை நிலைபெறுத்தியானெழுதுமுத்தரம், ௰௧ம் சஞ்சிகையுள் இடைபெழுத்தைப்பற்றி யவரெழுதிய வினாவையும் ௰௯ம் சஞ்சிகையில் யானெழுதிய விடையையும் ௰௮ம் சஞ்சிகையில் அவரெழுதிய எதிர்மொழியையுஞ் சீர்தூக்கிப்பார்த்து அதன்மேல் யானிங்ஙனமெழுதுமுத்தரத்திற்குக் குணங்குற்றந்தெரிப்பது படிறிலவாஞ் செம்பொருள் கண்டவாய்ச்சொல்லுடைய சான்றோர்க்கழகு.

௧ம். உத்தரம்.

ஒரு நூலுளேனுஞ் சொல்லப்படவில்லையென்று இலக்கண நுட்ப விசாரணைகாரன் கூறப்புகுந்ததற்காய் வியப்புற்றுநன்னூல் இலக்கண விளக்கங்களுள் "ஐ ஒள" "தானமுயற்சி" "சிறப்பினுமினத்தினும்" "தோற்றமுயற்சி" இத்தொடக்கச் சூத்திரங்களில் ஆசிரியர் கண்கூடா யொப்புமையாற்றெருத்தே யுரைத்தாரன்றி யிகந்தாரல்லவென யான்றுணிந்த விடத்து (௩வது) பொதிந்துகிடந்த உடம்படன்மதத்தின் வலியையும், சுருங்கச்சொல்லல் வனப்பினிலையையும், அவர் நோக்காமலும், (௨வது) "ஐ ஒள" எனுஞ் சூத்திரத்தானிடமும், "சிறப்பினும்" எனுஞ் சூத்திரத்தானுலகிற் போந்த நெடுங்கணக்குமுறையே யர-லவ-ழள எனஇனமும், இலக்கண நுட்பவிசாரணைகாரன் முடித்தறிவரெனக் கருதி "தானமுயற்சி" எனுஞ்சூத்திரத்தாற் காரணமும். கூறுதேயமைத்துக் காட்டினேனெனப் பார்க்காமலும் வீணுய்க்கூறியதால், அவரறியாமற் சொன்ன. ௧ம். ௩ம். குற்றங்களடிபட இவற்றின்பாற்றூங்கிய, ௰ம். குற்றம்பறந்தோட, ௧ம். குற்றத்தொடு மாறுகொள நின்ற, ௨ம். குற்றமுஞ் சிதறிற்று.

௨ம். உத்தரம்.

[முத்தமிழ்க்கலைய முழுதொருங் குணர்ந்து-கற்பவர் தமக்கிரு கண்ணெனத்தோன்றி-வாதியர்க்கிடிகிகர்வைத்தியநாத-தேசிகன் புகழெனச் செகத்தினிலிலங்கும், இலக்கண விளக்கத்தினருமை பெருமையை விசாரித்தெனினு முணராயல், அதற்கெதிராகச் சூருவளியெனுநூரேன்றினைக் கேள்விப்பட்டு "அது சூருவளியினலடிபட்டதை அம்மாணுக்கனறிந்திலான் போலும்" என்றுன். இவன் வாய்ச்சொற்கொள்ளாரறிவுடையோர். அது கல்லகர் மனப்புலிமுதலியார் சரவணமுத்து, தமிழ்ப்புலவர் வேதகிரிமுதலியார், திரு. விசாகப்பெருமாள் ஐயாமுதலியசான்றோராலங்கீகரிக்கப்படுவதையும் அறிந்தானில்லைப்போலும். ஒருபொருளின் சாத்குணகன்மங்களைச் சிற்றமாத்திரையானுங் குறியானுமைவடுஞ் சான்றோரிவர் கேள்விக்கு விடைபெழுதாத ஞாபமுமிஃவனம் அனுமானப் பிரமாணத்தாற் பெறும்]. நாவினியல்பு பதினொன்றனுளமைந்து கிடந்த எழுவகை மதத்தின் மறுத்தல் பிறர்நூற் குற்றங்காட்டல் போலவனவற்றின் பொருளைப் பாராமலுந் தந்திரவுத்தியின் ஒரு தலைதுணிதல் பிறன்கோட்கூறல் முதலியவற்றின் கருத்தை யோராமலும், சான்றோர்வாக்கிற் பிறழ்பாவும் பிறழுமொழுமவாக்கியத்தின் செம்பொருடோராமலும், வைத்தியநாத தேசிகரிலக்கண விளக்கம் பவணந்தி முனிவர் வாக்கிற் பிறழ்ந்ததென்று, அதன்சூத்திரங்களை அங்கீகரிப்பது குற்றமென்றதினைமேலாமையால நாலகாங்குற்றமும்; "புணை" எனுஞ்சொல் முதனிலைத் தொழிலாகுபெயராகிப் புணைத்தற்கருவியாய தலையெனும் பொருடந்து நின்றதையறியாமலும், "புணை" "புணை" யென்பன இருசொலலொரு பொருளென அவர் குறியாமலும் "முன்னோர் மொழியும் பொன்னேபோற்போற்றுவம்" என்னும் வாக்கினிழுக்கலேனெனப் பொய்கூறினதால் ஒம்குற்றமுந் தகர்ந்தன. இவற்றைச் சார்ந்த, ௯ம். ௭ம். குற்றங்களு முடைந்தன.

௩ம். உத்தரம்.

இலக்கண நூல்களுட் கூறிய வழக்குத்தமிழ்ப்பேதங்களை யுணராமலும, இன்னநூலின்ன முறையானியலுமவின்னநூல கற்றபினின்ன நூலகேட்கத்தகுமென்னும் நூல்யாப்பைச் சற்றெனினும் அவரறியாமலுமென்மேற் சார்த்திய ௮ம், ௯ம் குற்றங்களும் விழலாகயானெழுதிய விடையுந் துளக்கலாகா மலையெனவே நிற்கின்றது. யாழ்ப்பாண மாணுக்கனென்றெருவரெழுதினர்மறுமொழியெனஅவரிகழாதிகழ்ந்தது புகழாப் புகழ்ச்சியாயிற்றே. இலக்கண நூல்களுட் காணவில்லை யென்றவர் சொன்னதைக், கண்டிருக்கின்றதென, மாதிபுணவித்தகமெனுஞ் சொல்லால் யான்விளக்கினது அவருக்குப் பொய்க்குவைபிலோ மெய்யும் மட்டியுள்முத்தும் பிரகாசித்தாற் போற்றுனே யிருக்கும். இலக்கணத்து வலலோர் கைபிடவேண்டியதிலோமாணுக்கன முயலிற் பொய்படுமொன்றே புணைபூணுங் கையறியாப் பேதைவினைமேற் கொளினென்றதை யென்மேலேற்றிக் கூறமுன் அவர்தம்மேற் பூண்டாராயிற்றே. அவர்கூறிய மற்றுஞ்சழக்கசைப்புக்குழப்புகளும் பயனுநயனுமிலவாயழிந்தொழிந்தனவே.

இப்படியேகுற்றமில்லாதென் விடைதென்னிற்கிடப்ப, "சமன்செய்து சீர்தூக்குங் கோல்போலமைந்தொருபாற் கோடாமை சான்றோர்க்கணி" என்னும்விதி தலைமேற்கொண்டு தகுமெனக்கண்டச்சிற் பதிப்பித்த முகாமைக்காரர் யாதொரு கவனிப்பும் பண்ணமல்விட்டதாச்சரியமென்றவர் சொன்னதை வாசித்தோருங் கேட்டோருமிகநகைத்தனரியாயிற்றே. என் விடையைப் பொருளுணராமற் சிறுசிறுப்பென்று சொன்னவர், அது சிறுசிறுப்பல்லப் பண்ணிகாரமேயென்பதை இப்போதியான் விளக்கும் பொருட் சுவையாலறிவாராக.

இலக்கண நுட்பவிசாரணைகாரன் ௰௩ம். சஞ்சிகையிற் காட்டிய ஐ ஒள என்னுஞ் சூத்திரத்திலேயே ஆசிரியர் யர-லவ-ழள என்னும் இடையினங்களை மற்ற முதலெழுத்துகள் போற் சேரக்கட்டி வைக்கொண்டாராயிற்று. யாதுகாரணங்காட்டியோவெனின், மற்றையெழுத்துகட்குப் போற்றுனமுயற்சியளவு பொருள்வடி வானவொன்றுதயோர் புடையொப்பான். இதையிங்ஙனம் விரித்துக்காட்டில் பரக்கள் இடமாத்திரைகளாலும், வேயல்-வேரல் சாய்தல்-சார்தல் இவைபோலப் பொருளாலும், லவக்கள், இடமாத்திரைகளாலும் ஏலவைகை-ஏவ்வகை-செல்லம-செல்வம் இவைபோலப்பொருளாலும், ழளக்கள் இடமாத்திரைகளாலும், காழகவுடையான்-காளகவுடையான் குழகன்-குளகன் இவைபோலப் பொருளாலும் ஒரோவிடத்தும் நீழ்கின்-வாழ்வவி-வாள்வவி இவைபோல் வொலிவடி வொப்புமையாலுமோர்புடை யொத்தினமாயின. முற்காலத்து வழங்கிய வரிவடிவுகளைப் பிற்காலத்தார் மாறியும வழங்கி வருகிறார்களெனப் பல இலக்கண நூல்களே சாட்சி பகர்கின்றன. நோக்கி வரிவடிவுகளிற் சிறிதொப்புமை கூறுவாருமுளர். இலக்கண நூல்களுள்ளும் நெடுங்கணக்கினுள் ளுமிங்ஙனங் காட்டிய காரணங்களின் மெற்சிறப்பானுஞ் சந்தவிகற்பங்களுக்கியைபுடைமையானுமெழுத்துகளுட் சிலவொன்றன்பின்னொன்ற செவ்விதிற் சேர்ந்து தொடர்ந்து வரும்பெரும் பான்மையானுமினங்கொள்ளப்பட்டிருக்கின்றது. மேற்கூறிய காரணங்களானுமிக்காரணங்களானும் யர-லவ ழள ஒன்றற்கொன்றினமாய் நின்றனவென, நன்னூலுள் எழுத்தியல் ௰௯ம், ௰௭ம் சூத்திரங்களின் கீழ்ச் சமண்முனிவர் விரித்திருக்கின்றதையும் இலக்கண விளக்கத்துள் "தோற்றமுயற்சி" என்னுஞ் சூத்திரத்தின்கீழ் விரித்திருக்கின்றதையும் தொல்காப்பியத்துள் "எழுத்தெனப்படுப அகரமுதனகரவிறுவாய் முப்பஃதென்ப" என்னுஞ்சூத்திரத்தின் கீழ்உரையாசிரியர் நச்சினார்க்கினியார் ருரைத்திருக்கின்றதையும மற்றுஞ்சில விலக்கண நூல்களுட்டந்திருக்கின்றதையுங் கண்டுகண்டு தேறுக. யானவைகளை யிங்ஙனம பெயர்த்தெழுதற் பெருகும்.

இலக்கணநுட்ப விசாரணைகாரன் சார்த்திய குற்றங்கடிந்தென் விடையை விளக்கப் புகுந்தமையான் மற்றென்றுமின்னனம் பேசிலன்.

அவர் குற்றங்களைத் தெரிக்கப்புகின் மணற்சோற்றிற் கல்லாராயப் புறப்பட்டாற்போலாம்.

<table>
<tr><td>௧௮௪௧ ஆ
புரட்டாதி மீ ௰ தீ</td><td>இப்படிக்கு
யாழ்ப்பாண மாணுக்கன்.</td></tr>
</table>

முகாமைக்காரர் வசனம்.

இதின்மேல் இலக்கணநுட்ப விசாரணைகாரன் மறுத்தெழுதாமலும் இதைப் பற்றித் தருக்கமவிளக்காமலுமிருக்கக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

[Answer to the Optical Question in No- 17.]
To the Editors of the Morning Star.

GENTLEMEN,

In the act of seeing, the rays of light proceeding from the object at which we look, enter the pupil and fall on the back part of the eye. It is ascertained by observation that the rays must fall on given and corresponding points of this part of each eye in order that there may be a single perception of the object, and that if they fall on any other part of it, the object will appear double. It is when the eyes are directed to a particular object that the rays of light coming from that object and entering the eyes fall upon these given points, and the object is seen single as it ought to be; but if while the eyes are fixed on this object, the attention be partially directed to another nearer or more distant this latter will appear double because the rays of light proceeding from it to the eye do not fall on that part where they must fall to give a right and single perception of the object.

For instance, taking the phenomenon alluded to in the question, suppose while looking at the object a line is drawn from the finger to the back part of each eye through the pupil. This line must impinge upon a point of the eye

Digitized by Google

which is exterior to a point upon which a line from the object falls. Hence the finger appears double.

In the same manner it may be shown, that while looking at the finger, if a line be drawn from the object to the back part of each eye through the pupil, this line will not fall on the given and corresponding points of the eye, but on a point nearer the nose. Hence the object will appear double, while the finger is seen single.

An answer to the following question is desired, viz. What is the use of *two eyes?*

Your's &c.
Batticotta Sept. 29th 1841. D. L. CARROLL.

நயனசாஸ்திர வினாவுக்கு விடை.

கந்தர் ஆறுமுகப்பிள்ளை யெழு. சஞ்சிகையில் எழுதின நயனசாத்திர வினாவுக்கு விடை.

ஒளி யாதொருபொருளில் இருந்து கட்டுவாரம் வழியாய்ச்சென்று அதன் அடிப்பக்கத்தில் விழுங்கால் அப்பொருள் தோற்றும். இரண்டு கண்ணின் அடிப்பக்கத்திலும் ஒன்றுக்கொன்று சமமான இரண்டுதானங்கள் உண்டு. இவற்றிற்குச் சமஸ்தானங்களென்று பெயர். பொருள் ஒற்றித்துத்தோற்றும்வேளையெல்லாம் அதன் ஒளி இச்சமஸ்தானங்களில் விழுந்திருக்கும். இவையொழிந்தெவ்வணம் ஒளிவிழுந்தாலும் பொருளை இரட்டுறக் காட்டும். மேலும் இரண்டு கண்ணும் கவனமாய் ஒரு பொருளை நோக்கும்போதன்றி வேறொருக்காலும் அதன் ஒளி சமஸ்தானங்களில் விழா, எனவே யாதொருபொருளைப் பார்க்கும்பொழுது அதற்கு அப்பால் அல்லதிப்பால் இருக்கும் வேறொரு பொருளுக்குச் சற்றே கண்ணெறிந்தாற் பின் கூறப்பட்ட இப்பொருளின் ஒளி சமஸ்தானத்தில் விழாது, வேறு தானத்திற் படும். ஆதலால் இது இரட்டித்துத் தோற்று.

இவ்விதியொடு நயனசாத்திர வினாவையும் ஒட்டுக. எவ்விதமெனில், பொருளைப் பார்க்கும்பொழுது, ஒளிநேர்ச்சியாய்க் கட்டுவாரம் வழி நேரப்படும் வரி விழுந்தானமே சமஸ்தானமாம். இனி விரலில் இருந்து இவ்விதமே நேரப்படும் ஓர்வரி இந்தச் சமஸ்தானத்தை விட்டுக் கடைக்கண்ணயலாய வேறொருதானத்தில் விழுவதால் விரல் இரட்டித்துத் தோற்றுகின்றது.

இவ்விதமே, விரலைப்பார்க்கும் பொழுது அதிலிருந்து ஒளிநேர்ச்சியாய்க் கண்ணுக்கு வரும் ஓர்வரி சமஸ்தானத்தில் விழப், பொருளில் இருந்து அம்முறையே செல்லும் ஓர்வரி நாசிக்கு அயலான வேறொரு தானத்தில விழுவதினால், விரல் ஒற்றித்தும் பொருள் இரட்டித்துத் தோற்றும்.

பின்னால் வரும் வினாவுக்கு விடை அறிந்தோர் அதனை உதயதாரகை வழியாய் அறிவிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன். அஃதாவது இரண்டு கண் இருப்பதினால வரும் நயமென்ன?

இப்படிக்கு
வட்டுக்கோட்டை வைரவநாதர் விசுவநாதன்.
நூஅாசகம், ஆடு. புரட்டாதி
மீ. உகூ தி.

To the Editors of the Morning Star.

Gentlemen,

I pray you will have the goodness to insert the following Mathematical question in your most valuable paper, and to request Mathematical students to solve it, and to show reason for so solving.

Oodoopitty school, I am your obdt. servant.
Aug. 26th. 1841. A. Student.

QUESTION.

There are two different numbers; the square of the less number plus the greater one is equal to 325½; and the square of the greater number plus the less one, is equal to 388 1-16; then what are those two numbers?

கணக்குக் கேள்வி.

அதாவது. இரண்டு இலக்கங்களுண்டு. அவைகளின் சிறியவிலக்கத்தின் வர்க்கத்துடன். பெரியவிலக்கத்தைக் கூட்ட ௩௱௨௰௫½ (முந்நூற்றிருபத்தைந்தரை) வரும். பெரியவிலக்கத்தின் வர்க்கத்துடனே சிறியவிலக்கத்தைக் கூட்ட ௩௱௮௰௮ — (முந்நூற்றெண்பத்தெட்டு வீசம் எனவும்) வரும். அப்போது அவ்விரண்டிலக்கங்களும் என்ன?

இப்படிக்கு
உடுப்பிட்டி பள்ளிக்கூடம். } ஓர் மாணாக்கன்.
சக. ஆடு ஆவணி மீ உசுதி. }

துரைகளே,

இராமாயணம், முதற்காண்டம், சந்திரசயிலப்படலம், ௫௰௫ம். செய்யுள்.

இனுமாழைபிளந்தனிரேயெழி
வீனுமாழை பிளந்தனிரேபிடை
மானும்வேழமு நாகமுமாதர்தோண்
மானும்வேழமுநாகமுமாடெலாம்.

இச்செய்யுளின் கருத்து என் சிற்றுணர்வுக்குப் புலப்படாமையால் இஃதை நீங்கள் உங்கள் உதயதாரகைப் பத்திரிகையின் வழியாய்ப் பிரசுரஞ்செய்து முற்றுணர்ந்த பெரியோர்களின் கருத்தை யிப்பத்திரிகையின் வழியாய் அறியச்செய்யும்படி கேட்டுக்கொள்ளுகிறேன். அன்றியும் இராமாயணக் கையெழுத்துப் பிரதிகள்தோறும் ஊருக்கூர் வேறுபட்டிருக்கையால் இச்செய்யுளிற் பிழையிருந்தாற் திருத்திக்கொள்ள வேண்டியதும் புலவோர்கடன்.

இப்படிக்கு
திருவல்லை குமாரசுவாமியார் பள்ளிக்கூடத்
நூஅாசகம் ஆடு புரட்டாதி தோர்மாணாக்கனாகிய சுப்பர்
மீ, உஉக். தி கணபதிப்பிள்ளை.

பரமார்த்தகுருவின் கதை.

இரண்டாவது.

குதிரை முட்டை வாங்கின கதை ஏகும். பக்கத்தினின்று

இந்த ஆலோசனையெல்லாம் மடத்திலே நடக்கும்போது மூன்றுஞ்சாமத்துச் சந்திரோதயத்தோடு புறப்பட்ட மட்டியும் மடையனும் இரண்டரைக் காதவழிக்கப்பால் முன் கண்டு குறித்த அடையாளத்துக்குப் போய்ச் சாம்பற் பூசினிக்காய் திரளாய்க் காய்த்துக்கிடந்த ஏரியின் கரைக்குச் சென்றார்கள்.

அதைக் கண்டு மிகவுங் களிகூர்ந்து காத்திருந்த குடியானவன் கிட்டப் போய், இந்தக் குதிரை முட்டைகளில் எங்களுக்கு ஒரு முட்டை அவசியமாய்த்தரவேணுமப்பாவென்று கெஞ்சினார்கள். அவனும் இவர்கள்பேதைமையைகண்டுகொண்டு ஓ!ஓ!இந்தஉத்தம சாதிக் குதிரைமுட்டையை நீங்கள் வாங்கத்தக்கவர்களோ வெகுவிலைபெற்றதாக்குமென்றவன் சொல்லப், போம் ஐயா, இதுக்கு ஐந்து பொன்தான் உள்ளவிலையென்று நாங்கள் அறியோமோ, இதோ ஐந்துபொன்னையும் வாங்கிக்கொண்டு நல்ல முட்டையைத் தாருமப்பாவென்றார்கள். அதற்கவன் நீங்கள் நல்ல கிரேஸ்தர்தானே, உங்கள் குணத்தைப் பற்றி இந்த விலைக்குக் கொடுக்கச் சம்மதிக்கிறேன். ஆகையால் உங்களுக்கு ஒரு முட்டை சரிப்போனதைத் தெரிந்துகொண்டுபோங்கள், ஆனாலும் இந்த மலிவோடே வாங்கினதாகப் புறத்தியிலே வெளிவிடாதேயுங்களென்றான். அவர்கள் இருவரும் எல்லாத்திலும் பெரியவொரு காயைத் தெரிந்தெடுத்து மறுநாள் அதிகாலமே பயபயவென்று விடியும்பொழுதெழுந்து புறப்பட்டார்கள்.

மட்டி தலைமேற்பத்திரமாய் முட்டையை எடுத்தேற்றி மற்றொருவன் முன்னே வழிகாட்டிக்கொண்டு போகையில், மட்டிசொல்லத் துடங்கினான், ஆ! ஆ! முன்னோர்கள் சொன்னது,

"தவஞ்செய்வார், தங்கருமஞ்செய்வார்"

இதுக்கத்தாட்சி இப்போ கண்ணாலே கண்டோம். நம்முடைய குருக்கள் பண்ணிக்கொண்டுவருகிற தவத்தின் பலன் இதுவே. சாதிக்குதிரை நூறுபொன் நூற்றைம்பதுபொன் பெறத்தக்கது நாம் ஐந்து பொன்னுக்கு வாங்கிக்கொண்டு போகிறோமேயென்றான். அதுக்கு மடையன் இதிலே ஆலோசனையோ?

"அறத்தால்வருவதேயின்பமற்றெல்லாம்
புறத்தபுகழுமில"

வென்றது நீ கேட்கவில்லையோ? ஊதியம்மாத்திரமல்லப் புண்ணியத்தினால் இன்பம்வருமொழியமற்றதெல்லாந் துன்பமும் அபகீர்த்தியுமாகும். என் தகப்பனார் நெடுநாள் வெகு புண்ணியங்களைச் செய்ததல்லவோ நான் பிறந்த பலனையும் மகிழ்ச்சியையுங் கண்டாரென் மடையன் சொன்னான். அதுக்கு இவன் இதிலே சந்தேகமோ "ஆமணக்கு விரைத்தால் ஆச்சாமுளைக்குமோ?" நல்வினைக்கு நன்மை வருந் தீவினைக்குத் தீமைவருமென்றான்.

இப்படியே பேசிக்கொண்டு வெகுதூரங்கடந்த பின்பு சாய்ந்து தொங்கின மரத்தின்கொப்புக் குறுக்கே பட்டு விழுந்தாட்டின பூசினிக்காய் கீழே கொத்துக்கொத்தாய்ப் படர்ந்த செடியின் மேலில் விசைப்பட விழுந்து தகர்ந்துடைந்தது.

அப்போதந்தப் புண்டிலேபதுங்கியிருந்தமுசல் அதிர்ந்தெழுந்தோ

Digitized by Google

டிப்போயிற்று. இதோ கூட்டிலிருந்த குதிரைமறி ஓடுதென்றபயமிட்டு இருவரும் அதைப் பற்றிப்பிடிக்கத் தொடர்ந்தார்கள். மேடும், பள்ளமும், காடும், வெளியும் பாராமல் ஓடவே உடுத்த சீலைகள் முட்செடியிலே மாட்டிக் கிழிந்தது பாதி, பிடிபட்டது பாதி, மிதித்த கட்டை சதையைக்கீறத், தைத்த முள்ளால் இரத்தம்பாய, உடம்பெல்லாம் வேர்வை வடிய, நெஞ்சுபதைக்க இருகாதடைக்க இளைத்திளைத்திரைக்கக்குடலேதெறிக்க ஓடிஓடியும் முசற் பிடிபடாமல் இருவருந் தவித்துத் தகைத்து விழுந்தார்கள். இதற்குள்ளாக முசல் போய்க் கண்ணிலே சந்தியாமல் ஒளித்து வெகுதூரம் ஓடிப்போயிற்று. அவர்களும் இளைப்புப் பாராமலெழுந்து முள்ளுக் கல்லுக்கட்டைகளாலே காயப்பட்ட கால் நொண்டிநொண்டி அங்கங்கே தேடிச் சலித்துப் போய் அன்றைக்கெல்லாம் பசியும் பட்டினியுங் கிடந்தஸ்தமித்த பின்பு மடத்திற் சென்றார்கள்.

மடத்து வாசலில் நுழையும்போது அப்பாடா! அப்பாடா! என்று தங்கள் வாயிலே அறைந்துகொண்டு கீழே அடித்துவிழுந்தார்கள். ஏதோவேதோ வந்த பொல்லாப்பென்னவென்று மற்றவர்கள் வந்து கைதூக்கியெடுத்துக் கேட்க நடந்த வருத்தமானதெல்லாம் இருவரும் விபரமாய்ச் சொன்ன பிறகு மட்டியென்பவன் சொன்னான். ஐயா, நான் பிறந்தநாட்டொடுமறி ஒருக்காலும் இத்தனை வேகக் குதிரையைக் காணேன் கறுப்புப் பாய்ந்த சாம்பனிறமாய் நீளத்திலேயும் பருமத்திலேயும் முசலொத்த ரூபமாய் ஒரு முழ நீளமாய் இன்னங் கூட்டிற் கிடந்த மறியானாலும் இருசெவி விறைத்துக்கொண்டிருவிரற்கடைநீளத் தேறுவாலையுந் தூக்கி நிலத்திலே நெஞ்சுபட நாலுகால் விரித்து நீட்டி ஓடின சுறுக்கும் வேகமுஞ் சொல்லவுங் கருதவுங் கூடாதென்றான்.

அதுக்கெல்லாரும் அங்கலாய்த்திருக்கக் குருவானவர் அவர்களை அமர்த்தி ஐந்துபொன் போனதென்னதுதானே ஆகிலுங் குதிரை மறியும் போனதுதாவிலை. மறியாயிருக்க இப்படியோட்டம் பிடித்ததினிமேற் பஞ்சாயமாகிறபோததின் மேல் ஆரிருக்கப்போகிறார்கள். நான் கிழவனுக்கும் அந்த வாக்கக்குதிரை சும்மா இலவசமாய்த் தந்தாலும் எனக்கு வேண்டாமப்பாவென்றார்.

THE ADVENTURES OF THE GURU NOODLE.

(By Beschi)

Second Story.

Of the purchase of the Horse's Egg.

(Continued frome page 167.)

Whilst all this deliberation was taking place in the Mattam, Blockhead and Idiot, who had set out in the third watch with the rising moon, after a journey of more than two kadams and a half, bent their course towards the mark which they had before seen and noticed, and arrived at the borders of the lake where there was an abundance of pumpkins in fruit.

On perceiving this, being greatly delighted, they went to the countryman who was attending there and entreated him, saying, "Master, we earnestly conjure you to give us one of these eggs." He, in his turn, seeing their idiotism, said, "Hey-day! do you suppose yourselves fit to buy such high bred horses' eggs as these? They are very costly indeed." To this they replied, "Go to Master, do we not know that five pagodas is the price of them? Look ye, friend, take your five pagodas and give us a good egg" To this he answered, "You are, to be sure, fine honest fellows. In consideration of your good qualities, I consent to give them to you at this price; select therefore an egg to your liking, and go your ways, but do not publish it abroad that you have obtained it at this easy rate." They both of them selected and took away a fruit which was larger than all the rest, and rising early the next morning, they set out on their journey just as the day was breaking.

Blockhead having carefully taken the egg and lifted it on his head, the other went before shewing the way, and while they were thus going along, Blockhead began to say, "Ay, ay, our forefathers have said, *they who perform penance, are forwarding their own affairs.* We have now seen the proof of this with our own eyes. This in truth is the profit which has accrued by the penance continually performed by our Guru. A high bred horse, which is worth a hundred or a hundred and fifty pagodas, we purchase and take to him for five." To which Idiot replied, "Needs this any reflection? Hast thou not heard the saying—*from pious actions alone proceeds delight, all else is irrelevant and unworthy of praise.* From virtue, not only profit, but pleasure proceeds; except there be (virtue), all else will be misery and disgrace. Did not my father for a long time practise many virtues; and he found his profit and delight in the end, in having me born to him." To which the other replied, "Can this be doubted? *If you sow a castor oil tree, will an ebony tree be produced?* From good actions, good will proceed, from evil actions, evil."

Thus conversing, after they had walked along for a considerable distance, the pumpkin, from striking against the bough of a tree which was bent and hanging down, was dashed out of his hands, and suddenly tumbling upon some shrubs which were spreading in bushes below, cracked and fell to pieces.

